**Central Organisation of**
**Tamil Nadu Electricity Employees**
(Regd. No. 158 / CPT, - Recognised by TNEB - Affiliated : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, MOSQUE STREET,
C H E P A U K ,
CHENNAI - 600 005.
Phone : 2 8 5 4 8 5 2 9
2 8 5 1 5 0 3 8
Fax : 2 8 5 1 6 5 7 4

President
**S.S.SUBRAMANIAN**

General Secretary
**S. RAJENDRAN**

Treasurer
**M. VENKATESAN**

பெறுநர், நாள் : **29.09.2016**

**செயலாளர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் விநியோகக்கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002.

அய்யா,

**பொருள் : 2015-2016 - மின்வாரிய ஊழியர்களுக்கு போனஸ் - தொழிற் சங்கத்திற்கான போனஸ் நன்கொடையை பணியாளர்களின் போனஸ் தொகையில் பிடித்தம் செய்து வழங்கிட வேண்டுதல் தொடர்பாக**

**பார்வை :** 1. **(Permanent) B.P. (Ch). No. 77 (SB) Dated 28/02/2007**

2. **(Permanent) B.P. (Ch). No. 111 (SB) Dated 09/05/2007**

பார்வையில் கண்டுள்ள வாரிய உத்தரவின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர் மற்றும் தொழிலாளர்களிடம் தொழிற் சங்கத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற போனஸ் நன்கொடை தொகையினை பணியாளர்களின் விருப்பத்தின் பேரில் பிடித்தம்செய்து தொழிற் சங்கத்திற்கு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2015 - 2016 ஆம் ஆண்டு போனஸ் வழங்கும் போது போனஸ் நன்கொடை தொகையை செலுத்திட விருப்பம் தெரிவிக்கும் பணியாளர்களிடம் போனஸ் தொகையில் நன்கொடை பிடித்தம் செய்து எங்களது தொழிற்சங்கத்திற்கு வழங்கிட தகுந்த உத்திரவு வழங்கிடுமாறு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு /சிஐடியு (பதிவு எண் 158 /CPT) சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

போனஸ் நன்கொடையைப் பொருத்த வரையில் ஒரு தொழிலாளி ஒரு சங்கத்திற்கு மேலும் நன்கொடை அளிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கலாம். அந்த அடிப்படையில் வேறு சங்கத்தை சார்ந்தவர்களும் எங்களது அமைப்புக்கு நன்கொடை அளிக்க விருப்பம் தெரிவித்தால், அவர்களிடமும் நன்கொடையை வசூலித்து அளிக்க வகை செய்யும் சரத்தையும் சேர்த்து உத்தரவு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடை தருவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றவர்கள் மத்தியில் போனஸ் பட்டுவாடாவில் பிடித்தம் செய்யவாய்ப்பில்லாமல் போகுமானால் அவர்களுடைய நவம்பர் மாத சம்பளம் டிசம்பரில் அளிக்கும் போது அதிலும் பிடித்தம் செய்து அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்களது வேண்டுகோளின் அடிப்படையில் 2015 - 2016 ஆம் ஆண்டு வாரியம் வழங்கிட உள்ள போனஸ், 2016 நவம்பர் மாத ஊதிய தொகையில் **ரூ.500/-ஐ (ரூபாய் ஐந்து நூறு மட்டும்)** விருப்பம் தெரிவிக்கும் ஊழியர்களிடம் பிடித்தம் செய்து எங்களது சங்கத்திற்கு வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**தங்களின் நம்பிக்கையுள்ள**

**(எஸ். எஸ். சுப்பிரமணியன்)**
**தலைவர்**